| | |
|---|---|
| வெளியிடுபவர் | பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் |
| திகதி | 2023.12.29 |

**இலங்கை மத்திய வங்கி, 2023ஆம் ஆண்டிற்கான நிதியியல் உறுதித்தன்மை மீளாய்வினை வெளியிட்டிருக்கிறது**

2023ஆம் ஆண்டின் நிதியியல் உறுதித்தன்மை மீளாய்வானது நிதியியல் முறைமையில் காணப்பட்ட அபிவிருத்திகள், இடர்நேர்வுகள் அவற்றின் அடையாளம் காணப்பட்ட பாதிக்கப்படும் தன்மைகள் மற்றும் ஆய்விற்குரிய காலப்பகுதியில் அத்தகைய இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கியினாலும் ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனங்களினாலும் மேற்கொள்ளப்பட்ட கொள்கை வழிமுறைகள் என்பனவற்றை உள்ளடக்கியிருப்பதோடு 2023 செத்தெம்பர் இறுதி வரையான தரவுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இவ்வெளியீட்டின் இலத்திரனியல் பதிப்பினை இலங்கை மத்திய வங்கியின் வலைத்தளத்தில் பார்வையிடமுடியும்.

(https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_images/publications/fssr/fssr_2023e.pdf)

**2023ஆம் ஆண்டிற்கான நிதியியல் உறுதித்தன்மை மீளாய்வின் சுருக்கமும் நிதியியல் உறுதித்தன்மையின் தோற்றப்பாடும் கீழே தரப்படுகின்றன:**

பொருளாதார நெருக்கடியினை உடனடுத்து முன்னொருபோதுமில்லாத பல்வேறு சவால்களை அனுபவித்த நிதியியல் துறை, சவால்மிக்க சூழ்நிலைகளின் கீழேயே தொடர்ந்தும் தொழிற்பட்டது. 2023 செத்தெம்பரில் முடிவடைந்த ஒன்பது மாத காலப்பகுதியில் ஒட்டுமொத்த அடிப்படையிலான பொருளாதாரச் சுருக்கமானது இறைத்திரட்சிக்கு ஆதரவளிப்பதனை நோக்கமாகக் கொண்ட வரி உயர்வுகள், உயர்வடைந்த விலை மட்டங்கள் மற்றும் வட்டி வீதங்கள் என்பனவற்றுடன் இணைந்து பொருளாதார முகவர்களின் நலிந்த ஐந்தொகையொன்றைத் தோற்றுவித்தது. இதன்படி, குறிப்பிடத்தக்களவிற்கு மோசமடைந்த கொடுகடன் தரத்திற்கு மத்தியிலும் கொடுகடனுக்கான கேள்வி மற்றும் வழங்கல் நிலைமைகள் குறைவடைந்தமையினைப் பிரதிபலித்து நிதியியல் இடையேற்பாடு[1] குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்றினை எடுத்துக்காட்டியது. ஒட்டுமொத்த கொடுகடன் வளர்ச்சியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு மத்தியிலும் அரசாங்கத்திற்கான நிதியியல் துறையின் வெளிப்படுத்துகை தொடர்ச்சியாக அதிகரித்து, நிதியியல் துறைக்கு சவால்களை ஏற்படுத்தும் சமநிலையற்ற தன்மையினை எடுத்துக்காட்டியது. 2023 மாச்சில் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதிக்கான ஒப்புதல் நம்பிக்கையினைக் கொண்டு வந்த வேளையில், நாட்டிற்கான படுகடன் மறுசீரமைப்பு செய்முறை பற்றிய நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் வங்கியினை ஆய்ந்தறிதல் செயன்முறையின் பெறுபேறு போன்ற அபிவிருத்திகள் இத்துறை மீது சில கரிசனைகளைத் தோற்றுவித்திருக்கின்றன. நாணயக் கொள்கைத் தளர்த்தலின் ஆரம்பத் தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், கொடுகடன் சுழற்சியின் நிலையினைப் பிரதிபலிக்கின்ற மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான தனியார் துறைக் கொடுகடனுக்கான இடைவெளி (கொடுகடன் இடைவெளி), சுழற்சி வட்டத்தின் கடுமையான தன்மையினைக் கடந்து சென்றுவிட்டமைக்கான சமிக்ஞைகளைக் காட்டியதுடன் சுழற்சி வட்டம் தற்பொழுது மீட்சிக் கட்டத்திற்குள் பிரவேசித்திருக்கிறது.

[1] நிதியியல் இடையேற்பாடு வங்கித்தொழில் துறையில் வைப்புகளுக்கான கொடுகடன் விகிதத்தினால் அளவிடப்படுகின்றது.

இவ் அபிவிருத்திகளோடு 2022இல் தீவிர கொந்தளிப்பு நிலையினை வெளிக்காட்டிய நிதியியல் சந்தைகள் உறுதித்தன்மைக்கான அறிகுறிகளை எடுத்துக்காட்டின. ஒட்டுமொத்த நிதியியல் சந்தை நிலைமைகள் 2022 உடன் ஒப்பிடுகையில் கணிசமானளவிற்கு தளர்வடைந்தமையின் காரணமாக அழுத்தச் சுட்டெண்ணினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு, நிதியியல் சந்தையின் அழுத்தமானது, 2023இன் முதல் பத்து மாத காலப்பகுதியில் பெருமளவிற்கு குறைந்த மட்டங்களில் காணப்பட்டது. பங்குச் சந்தைச் சுட்டெண்ணின் தளம்பல் படிப்படியாக குறைவடைந்த போதும் முதலீட்டாளர்கள் அரச பிணையங்கள் வடிவிலமைந்த உயர் விளைவு முதலீடுகளினால் தொடர்ந்தும் கவரப்பட்டனர். அதேவேளை, வங்கித்தொழில் துறை பங்குகளும் அரச படுகடன் மறுசீரமைப்புச் செய்முறைகளுக்கு உயர்ந்த உணர்திறனைக் காட்டியதன் மூலம் அரசுக்கான உயர்ந்த வெளிப்படுத்துகைகளைப் பிரதிபலித்தன. ஒப்பீட்டு ரீதியாக நலிவடைந்த உள்நாட்டுப் பேரண்ட பொருளாதார நிலைமைகள் இறுக்கமான உலகளாவிய நிதியியல் நிலைமைகளுடன் சேர்ந்து உள்நாட்டுப் பங்குச் சந்தையில் குறைந்த மட்டத்திலான வெளிநாட்டு முதலீடுகளைத் தோற்றுவித்தன. அரச பிணையங்கள் சந்தையிலுள்ள உயர்வடைந்த மட்டத்தில் நிலவிய விளைவுகளின் அடிப்படையில் ஒழுங்கற்ற வட்டி வீத அமைப்பு முழுமையாக இல்லையெனினும் படிப்படியாக வீழ்ச்சியடைந்தமைக்கு, உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகை தொடர்பான அறிவித்தலின் பின்னர் நிச்சயமற்ற தன்மைகள் மறைந்து போனமை, கொள்கை வீதங்களில் காணப்பட்ட கீழ் நோக்கிய சீராக்கங்கள், குறைவடைந்த பணவீக்கம் மற்றும் நிலைநிறுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்ப்புக்கள் என்பன முக்கியமான காரணங்களாக அமைந்தன. கடுமையான திரவத்தன்மைப் பற்றாக்குறையினைப் பதிவுசெய்தமையின் விளைவாக 2022இல் இலங்கை ரூபாவில் கணிசமான தேய்வினை ஏற்படுத்திய வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை, திரவத்தன்மை நிலைமைகள் படிப்படியாகத் தளர்த்தப்பட்டமையுடன் உள்நாட்டு நாணயத்தில் உயர்வொன்றினைக் காட்டியது. பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஒப்புதல் காரணமாக சந்தையின் நம்பிக்கை மேம்பட்டமை, விரைவான முறையில் ஏற்றுமதிப் பெறுகைகள் மாற்றப்பட்டமை, தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் என்பனவற்றினூடாக அதிகரித்த உட்பாய்ச்சல்கள் அதேபோன்று இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள், வரவு செலவுத்திட்டத்திற்கான ஆதரவுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கியிலிருந்து கிடைத்த நிதியங்கள் என்பன உள்;ர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் திரவத்தன்மை நிலைமைகள் தளர்வடைவதற்குப் பங்களித்தன. எனினும், உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகைக்காக இலங்கை அபிவிருத்தி முறிகளின் மாற்றுகைக்கு வசதியளிப்பதற்காகப் பெருமளவிற்கு அதிகரித்த வெளிநாட்டு நாணயத்திற்கான கேள்வி மற்றும் அதனைத் தொடர்ந்து தளர்த்தப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள் என்பன குறிப்பாக 2023இன் மூன்றாம் காலாண்டுப்பகுதியில் உள்நாட்டு நாணயத்தின் மீதான தேய்வு அழுத்தம் கட்டியெழுப்பப்படக் காரணமாயின. 2022 காலப்பகுதியில் விடாப்பிடியாக உயர்ந்த பற்றாக்குறையினைப் பதிவுசெய்த உள்நாட்டு பணச்சந்தையின் திரவத்தன்மையானது, மத்திய வங்கியின் துணைநில் வசதிகளின் மீது வங்கிகள் அளவுக்கதிகமாக தங்கியிருப்பதனைக் குறைப்பதற்காக மத்திய வங்கியினால் விதிக்கப்பட்ட வழிமுறைகள், அரசாங்கத்திற்கான தற்காலிக முற்பணங்களினூடாக உள்ளீடு செய்யப்பட்ட திரவத்தன்மை, மத்திய வங்கியினால் வெளிநாட்டுச் செலாவணி ஈர்த்துக் கொள்ளப்பட்டமை நியதி ஒதுக்கு விகிதத்தில் செய்யப்பட்ட குறைப்பு நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களின் நியதிக;டான திரவத்தன்மை வழங்கல் மற்றும் குறிப்பிட்ட உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வழங்கப்பட்ட திரவத்தன்மை ஆதரவு வசதி என்பனவற்றினைத் தொடர்ந்து 2023 காலப்பகுதியில் கணிசமாக மேம்படுத்தப்பட்டது. மேலும், துணைநில் வசதிகளின் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் பணச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் மீளச் செயற்படுவதற்கு உதவியாக அமைந்தன.

அண்மைய பொருளாதார நெருக்கடிகளிலிருந்து கசிந்த தாக்கங்களினால் மோசமாக பாதிக்கப்பட்ட வங்கித்தொழில் துறை, சவால்மிக்க நிலைமைகளுக்கு மத்தியிலும் தொடர்ந்து தொழிற்பட்ட வேளையில்

2023இன் மூன்றாம் காலாண்டின் இறுதியில் முடிவடைந்த ஆண்டு காலப்பகுதியில் முன்னேற்றங்களுக்கான சில சமிக்ஞைகளை எடுத்துக்காட்டின. வங்கித்தொழில் துறையினால் வழங்கப்பட்ட கொடுகடன் இக்காலப்பகுதியில் சுருக்கமடைந்தமைக்கிடையிலும் 2023இன் மூன்றாம் காலாண்டுப்பகுதியில் சில மீட்சிகள் அவதானிக்கப்பட்டன. கட்டம் 3 கடன் விகிதத்தினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு, வங்கித்தொழில் துறையின் கொடுகடன் இடர்நேர்வு தொடர்ந்தும் உயர்வடைந்து மோசமான பொருளாதார நிலைமைகளின் காரணமாக ஐந்தொகை சுருக்கமடைந்தமையின் விளைவாக பொருளாதார முகவர்களின் படுகடனைத் தீர்ப்பனவு செய்யும் இயலாற்றல் தேய்வடைந்தமையினைப் பிரதிபலித்தது. எனினும், கட்டம் 3 கடன்களின் அதிகரிப்பு மெதுவடைந்தமையின் மூலம் எடுத்துக்காட்டப்பட்டவாறு, 2023இன் மூன்றாம் காலாண்டுப்பகுதியில் கொடுகடன் இடர்நேர்வு உறுதித்தன்மையொன்றினை எடுத்துக்காட்டியது. அதேவேளை, கொடுகடன் திரட்சி குறிப்பிட்ட துறைகளின் மீது அதாவது கட்டுமானம் மற்றும் வேளாண்மை மீது உயர்ந்தளவில் காணப்பட்டமையால் வங்கித்தொழில் துறைக்குள்ளே விடாப்பிடியாகக் காணப்பட்ட கொடுகடன் திரட்சி இடர்நேர்வுகள் உயர்ந்தளவு பாதிக்கப்படும் தன்மையினைத் தோற்றுவிப்பதற்கு பொருளாதாரம் மற்றும் காலநிலையுடன் தொடர்பான பிரச்சனைகளே காரணங்களாக அமைந்தன. மேலும், அரசுக்கான வங்கித்தொழில் துறையின் வெளிப்படுத்துகையும் துறைக்கான கரிசனைகளைத் தோற்றுவித்தன. இது மறுசீரமைப்புச் செயற்பரப்பிலிருந்து திறைசேரி முறிகளில் வங்கித்தொழில் துறை முதலீடுகள் நீக்கப்படுவதனை அவசியமாக்கின. ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்களில் செய்யப்பட்ட அதிகரித்த முதலீடுகள் வங்கித்தொழில் துறையின் திரவத்தன்மை விகிதத்தில் கணிசமான அதிகரிப்புக்களைத் தோற்றுவித்த வேளையில், வங்கித்தொழில் துறையின் துணைநில் கடன்வழங்கல் வசதியின் ஒட்டுமொத்தப் பயன்பாடு குறிப்பிடத்தக்களவிற்கு குறைவடைந்தது. வங்கிகளின் வெளிநாட்டு நாணயத் தொழிற்பாடுகளும் மீளாய்விற்குரிய காலப்பகுதியில் சுருக்கத்தினைக் காட்டியமைக்கு ஒன்றுதிரட்டப்பட்ட வெளிநாட்டிலுள்ள நிதியியல் நிறுவனங்களுடன் நிலுவை வடிவில் காணப்பட்ட வெளிநாட்டு நாணய மூலவளங்களின் கணிசமான தொகை வங்கித்தொழில் துறையில் காணப்பட்டமைக்கிடையிலும் மைய வெளிநாட்டு நாணயச் சொத்துக்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியே காரணமாக அமைந்தது. அதேவேளை, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் புதிய பெறுமதி இழப்புக் கட்டணங்கள் குறைவடைந்தமையின் காரணமாக துறையின் இலாபத்தன்மை மேம்பட்ட போதும் ஒப்பீட்டு ரீதியில் குறைவான பெறுமதி இழப்பு துறையின் எதிர்கால இலாபத்தன்மை மீது எதிர்க்கணியமான விளைகளைக் கொண்டிருக்கக்கூடும். மேலும், இவ்வாண்டுப்பகுதியில் இரண்டு உள்நாட்டு முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகள் உட்பட, பல வங்கிகள் இலாபத்தில் வீழ்ச்சிகளைப் பதிவுசெய்துள்ளன. கூட்டாண்மை மற்றும் சில்லறைக் கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளுக்கான வெளிப்படுத்துகைகள் வீழ்ச்சியுற்றமையின் முக்கிய காரணமாக, இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவாக வங்கித்தொழில் துறையின் மூலதனப் போதுமாந்தன்மை மேம்பட்ட போதும், 2023இன் மூன்றாம் காலாண்டுப்பகுதியில் உள்நாட்டு முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளின் மூலதனப் போதுமாந்தன்மை விகிதத்தில் கணிசமான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. வங்கித்தொழில் துறைக்குள்ளே மீள்மூலதனமயப்படுத்தல் தேவைப்பாடுகளை உயர்த்தக் கூடியமையினால் படுகடன் மறுசீரமைப்பினால் ஏற்படக்கூடிய இழப்புக்கள், வங்கி ஆய்ந்தறிதல் செயன்முறையின் பெறுபேறு மற்றும் முன்னோக்கிய தாக்க மதிப்பீடுகள் செயல் வடிவம் பெறல் என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு முன்னோக்கிய காலங்களில், வங்கிகள் இலாபத்தினை உருவாக்குவதன் மூலம் அவற்றின் ஆதரவுடன் மூலதனத் தாங்கியிருப்பினை வலுப்படுத்துவதன் மீது கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

2023ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டுப்பகுதியின் இறுதியில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் துறையின் கடன்கள் மற்றும் முற்பணங்களின் சொத்துப்பட்டியல் கணிசமானளவில் சுருக்கமடைந்தமைக்கு, குறிப்பாக, ஊர்திகளின் இறக்குமதி மீதான கட்டுப்பாடுகளே காரணமாகும். இது குத்தகை மற்றும் தவணைக் கொள்வனவு

நடவடிக்கைகளைப் பாதித்தது. மைய வியாபாரங்களில் வீழ்ச்சிகள் காணப்பட்டமைக்கிடையிலும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் துறை அதன் நடவடிக்கைகளை குறிப்பாக, அடகுபிடித்தல்Æ தங்கக் கடன் வசதிகளை நோக்கி பன்முகப்படுத்தின. இது உலகளாவிய தங்க விலைகளில் ஏற்படக்கூடிய தளம்பல்களின் காரணமாக துறைக்கு ஏற்படக்கூடிய இடர்நேர்வுகளை அதிகரித்தன. மொத்தக் கடன்களுக்கான கட்டம் 3 கடன்கள் அதிகரித்தமையின் மூலம் எடுத்துக்காட்டப்பட்டவாறு துறையின் சொத்துத் தரமும் மோசமடைந்திருக்கிறது. அதேவேளை, துறையின் ஒட்டுமொத்த திரவத்தன்மை ஏற்புடைய மட்டத்தில் தொடர்ந்தும் காணப்பட்ட வேளையில் ஒரு சில கம்பனிகள் திரவத்தன்மை தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதில் இடர்ப்பாடுகளை எதிர்நோக்கின. அரசின் கடன்களுக்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் வெளிப்படுத்துகை அதிகரித்தமைக்கிடையில் அரச பிணையங்களிலான முதலீடுகளும் அதிகரித்தன. மேலும், வட்டி வருமானத்திலிருந்தான உயர்ந்த வருமானம் மற்றும் குறைவடைந்த புதிய பெறுமதி இழப்புக் கட்டணங்களுடன் இணைந்த ஏனைய தொழிற்பாட்டு வருமானம் என்பனவற்றின் தூண்டுதல்களினால் துறையானது இலாபத்தில் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்த வேளையில், மூலதனப் போதுமாந்தன்மையும் மேம்பட்டமைக்கு ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தில் ஏற்பட்ட உயர்ந்த வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களில் காணப்பட்ட குறைந்த வளர்ச்சிக்கு கடன்கள் மற்றும் முற்பணங்கள் சுருக்கமடைந்தமைக்கு மத்தியில் அடகுபிடித்தல்Æ தங்கக் கடன் முற்பணங்களுக்கான உயர்ந்த வெளிப்படுத்துகை மற்றும் இடர்நேர்வற்ற முதலீடுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன முக்கிய காரணங்களாக அமைந்தன. 2020ஆம் ஆண்டின் பிற்பகுதியில் மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களை ஒன்றிணைப்பதற்கான முதன்மைத் திட்டத்தின் வெற்றிகரமான நடைமுறைப்படுத்தல் துறையின் நம்பிக்கை கட்டியெழுப்பப்படுவதற்கு உதவியது. எனினும், தாக்குப்பிடிக்கும் தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் துறையில் தற்பொழுது காணப்படும் ஒன்றிணைப்பதற்கான அவசியம் தொடர்ந்தும் காணப்படுகிறது. காப்புறுதித் துறையில், மீள்விலையிடல் கொள்கைகளின் காரணமாக மொத்த எழுதப்பட்ட காப்புறுதிக் கட்டணத்தில் அதிகரிப்பொன்று காணப்பட்டமைக்கிடையிலும் உயர்வடைந்து செல்லும் விலை மட்டங்கள் காணப்பட்ட வேளையில் காப்புறுதிக் கோரல்களும் 2023இன் முதலரைப்பகுதியில் அதிகரித்தன. அதேவேளை, பொதுக் காப்புறுதி இலாபத்தன்மை நியதிகளில் நீண்ட காலக் காப்புறுதிக்குப் பின்தங்கியுள்ள வேளையில் திரவத்தன்மை விகிதம் இரண்டு பிரிவுகளிலும் மேம்பட்டிருக்கிறது. மூலதனப் போதுமாந்தன்மை நியதிகளில், இத்துறைகள் வேறுபட்ட முறையிலான செயலாற்றத்தினைக் காட்டியமைக்கு பொதுக் காப்புறுதிப் பிரிவு மூலதனப் போதுமாந்தன்மை விகிதத்தில் வீழ்ச்சியைப் பதிவுசெய்த வேளையில் நீண்ட காலக் காப்புறுதிப் பிரிவின் இவ்விகிதம் மேம்பட்டமையே காரணமாக அமைந்தது. முன்வரும் காலங்களில் நிதியியல் நிறுவனங்கள், குறிப்பாக வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் காப்புறுதிக் கம்பனிகள் அரசுக்கான அவற்றின் வெளிப்படுத்துகையினை துறையின் உறுதிதன்மையினை உறுதிப்படுத்தும் விதத்தில் இடர்நேர்வுகளைக் குறைப்பதற்காக, முன்மதியுடைய வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதை நெருக்கமாக கண்காணிக்க வேண்டும். மேலும், நிதியியல் தோற்றப்பாட்டின் இயக்கவாற்றல் தன்மை மற்றும் டிஜிட்டல் கொடுப்பனவு முறைமைகள் பரிணாமமடைந்து வருகின்றமை என்பனவற்றிற்கு மத்தியிலும் இலங்கையின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் 2023இல் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினை எடுத்துக்காட்டின.

விலை மட்டங்கள் உயர்வடைந்தமையின் காரணமாக உண்மை வருமான மட்டங்களில் தேய்வினை ஏற்படுத்திய கடுமையான பொருளாதார நெருக்கடியின் பின்னணியில், வீட்டுத்துறை மற்றும் கூட்டாண்மைத் துறைகளின் சுருக்கமடைந்த ஐந்தொகையானது வீட்டுத்துறையினரதும் கூட்டாண்மைத் துறையினரதும் படுகடன் மீள்கொடுப்பனவு இயலாற்றல்களைப் பாதிப்பதாக அமைந்தது. பொருளாதாரத்தில் நிதியியல் வாடிக்கையாளர்களின் கணிசமான பங்கிற்கு வகைகூறும் வீட்டுத்துறை மற்றும் கூட்டாண்மைத் துறைகள்

மீளாய்விற்குரிய காலப்பகுதியில் கொடுகடனின் தரம் மோசமடைந்தமையினைக் காட்டியதுடன் அது நிதியியல் துறைக்கான கரிசனைகளையும் வெளிக்காட்டுவதாக அமைந்தது. மீளாய்விற்குரிய காலப்பகுதியில் வீட்டுத்துறை மற்றும் நிறுவன ரீதியான துறைகள்[2] இரண்டினதும் நேரக் கட்டமைப்பினைக் கொண்ட செயற்படாக் கடன்களின் விகிதம் அதிகரித்த வேளையில், முன்னையது உயர்ந்த வீதமொன்றில் அதிகரித்து வீட்டுத்துறையில் உயர்ந்த கடன் செலுத்தத் தவறும் வீதம் காணப்படுவதனை எடுத்துக்காட்டியது. மேலும், வீட்டுத்துறையினரால், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி நோக்கங்களுக்காகப் பெறப்பட்ட கடன்களின் செயற்படாக் கடன் விகிதமானது வீட்டுத்துறை நோக்கங்களுக்காக பெறப்பட்ட கடன்களின் அத்தகைய விகிதத்துடன் ஒப்பிடுகையில் உயர்வாகக் காணப்பட்டது. அதேவேளை, கொடுகடன் வழங்குகின்ற நிறுவனங்களின் நியதிகளில், வங்கித்தொழில் துறை கடன்வழங்கலில் பெரும்பங்கிற்கு வகைகூறிய போதும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறை வங்கித்தொழில் துறையுடன் ஒப்பிடுகையில் உயர்ந்த செயற்படாக் கடன் விகிதத்தினை அறிக்கையிட்டதன் மூலம் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறை குறைந்தளவிலான கொடுகடன் தரத்தினை எடுத்துக்காட்டின. நிதியல்லா கூட்டாண்மைத் துறையும்[3] நிதியியல் நிறுவனங்களில் கொடுகடன் தரத்தினைப் பாதித்த வட்டி உள்ளடக்க விகிதம் மற்றும் துறையின் கடன்தீராற்றல் என்பனவற்றில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் பிரதிபலிக்கப்பட்டவாறு, மீளாய்விற்குரிய காலப்பகுதியில் கொடுகடன் நம்பகத்தன்மை தேய்வடைந்து போனமையினை எடுத்துக்காட்டியது. அதேவேளை, இவ் அபிவிருத்திகள், பரிசீலனைக்குரிய இக்காலப்பகுதியில் நிலவிய ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த வட்டி வீதங்களுடன் இணைந்து புதிய கொடுகடன் வசதிகளை முன்னெடுப்பதிலிருந்து கடன்பாட்டாளர் மற்றும் கடன் வழங்குவோர் ஆகிய இருசாரரையும் ஊக்கமிழக்கச் செய்தன.

இத்தகைய கொந்தளிப்பான காலப்பகுதியில் நிதியியல் உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கு ஆதரவளிக்கும் விதத்தில் மத்திய வங்கியினால் பல்வேறு கொள்கை வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. மூலதனப் பாதுகாப்பு தாங்கியிருப்பு மற்றும் உள்நாட்டு முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளின் தாங்கியிருப்பினைக் கட்டியெழுப்புவதற்கான மத்திய வங்கியின் முன்கூட்டிய நடவடிக்கைகள் பொருளாதார நெருக்கடியிலிருந்து தோன்றுகின்ற எதிர்பாராத இழப்புக்களிலிருந்து வங்கித்தொழில் துறையினை குறிப்பிட்டதொரு அளவிற்குப் பாதுகாக்கப்படுவதனை இயலுமைப்படுத்தியது. மத்திய வங்கியும் உரிமம்பெற்ற வங்கிகளுக்கான அவசரகாலக் கடன்கள் மற்றும் முற்பண வசதியை நிறுவியதனூடாக நிதியியல் உறுதிப்பாட்டினை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகளை மேற்கொண்டதுடன், சொத்துக்களின் தரத்தினை மீளாய்வு செய்வது உட்பட, பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட பரந்த வீச்சிலான கொள்கை வழிமுறைகளுடன் சேர்த்து, நெருக்கடி முகாமைத்துவத்திற்காக உத்வேகம் மிக்க நிறுவன ரீதியான கட்டமைப்பினையும் வலுப்படுத்தியது. குறிப்பிட்ட வங்கிகளுக்காக மறுசீரமைப்பு மற்றும் மூலதன மேம்படுத்தலுக்கான வழிகாட்டலொன்றும் உருவாக்கப்பட்டது. மேலும் 2023ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித்தொழில் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் மத்திய வங்கியைத் தீர்மானங்களை மேற்கொள்ளும் அதிகாரசபையாக வரையறை செய்த வேளையில், இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் நிதியியல் மற்றும் நிறுவன ரீதியான இயலாற்றலை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகளும் மேற்கொள்ளப்பட்டன. மேலும், 2023 செத்தெம்பரில் இயற்றப்பட்ட 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ், மத்திய வங்கி நாட்டின்

---

[2] பகுப்பாய்வுகள் 2023 யூன் இறுதி வரையான காலப்பகுதிக்கான கொடுகடன் தகவல் பணியகத் தரவுகளினை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

[3] நிதியல்லா கூட்டாண்மைகளின் பகுப்பாய்வுகள், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் 2023 செத்தெம்பர் இறுதிவரை பட்டியலிடப்பட்ட 209 கூட்டுத்தாபனங்கள் தொடர்பான தரவுகளினை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன.

பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபையாக குறித்துரைக்கப்பட்டிருக்கிறது. சட்டத்தின்படி, அதன் கீழ், குறித்துரைக்கப்பட்ட பேரண்ட முன்மதியுடைய குறிக்கோள்களை எய்துவதற்கான அதிகாரங்களும் கருவிகளும் மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இக்கருத்திற்குட்பட்டு, வேறு பல பேரண்ட முன்மதியுடைய கொள்கைக் கருவிகளுக்கான கட்டமைப்பு மத்திய வங்கியினால் உருவாக்கப்பட்டன. இவை, உள்நாட்டு முறைமையியல் சார்ந்த வங்கிகளின் கட்டமைப்பினை மீளாய்வு செய்வதுடன் சேர்த்து எதிர் சுழற்சி வட்ட மூலதனத் தாங்கிருப்பு, வீடமைப்புக் கடன்கள் தொடர்பான பெறுமதிக்கான கடன் விகிதம் மற்றும் வருமானத்திற்கான படுகடன் தீர்ப்பனவு விகிதம் என்பனவற்றை உள்ளடக்கிக் காணப்பட்டன. இக்கருவிகள் முறைமையியல் சார்ந்த சமநிலையற்ற தன்மையினைக் கட்டுப்படுத்துவதற்கான தேவையேற்படும் வேளைகளிலும் துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை வலுப்படுத்துவதற்கான அடிப்படை நிலைமைகளைத் தூண்டும் சூழ்நிலையொன்றில் தாங்கிருப்புக்களை வலுப்படுத்துவதற்கும் நடைமுறைப்படுத்தப்படும். மேலும், இயக்கவாற்றல் மிக்க கடன் தீராற்றல் அழுத்தப் பரீட்சிப்பு திரவத்தன்மை அழுத்தப் பரீட்சிப்பு மற்றும் இடைத்தொடர்புத்தன்மை மற்றும் பரவக்கூடியதன்மை பகுப்பாய்வு என்பனவற்றை உள்ளடக்கிய அழுத்தப் பரீட்சிப்பு கட்டமைப்பு நிறுவப்பட்டமையானது வங்கித்தொழில் துறையில் உருவாகின்ற முறைமை பாதிக்கப்படும் தன்மையினை மத்திய வங்கி அடையாளம் காண்பதனை இயலுமைப்படுத்தியதன் மூலம் சரியான நேரத்திலான, தகவல்களை அடிப்படையாகக் கொண்ட கொள்கை வகுப்பு செய்முறைகளுக்கும் வசதியளிக்கப்பட்டது.

**நிதியியல் உறுதித்தன்மைத் தோற்றப்பாடு**

2023ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து தளர்த்தப்பட்ட உள்நாட்டு நாணயக் கொள்கையானது, நிதியியல் இடையேற்பாடு மீளெழுவதற்கு வசதியளிக்குமென எதிர்பார்க்கப்பட்டதுடன் 2023இன் மூன்றாம் காலாண்டுப்பகுதியில் வங்கித்தொழில் துறை கொடுகடன் படிப்படியாக மீண்டமையினூடாக இது எடுத்துக்காட்டப்பட்டது. 2023இன் மூன்றாம் காலாண்டில் சிறியதொரு பொருளாதார வளர்ச்சி பதிவுசெய்யப்பட்டமையினூடாக அவதானிக்கப்பட்டது போல உள்நாட்டுக் கேள்வி மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் மீண்டும் உத்வேகம் பெறவும் வருமான மட்டங்கள் மேம்பாடடையவும் வீட்டுத்துறை மற்றும் நிறுவனங்களின் ஐந்தொகையின் மீதான அழுத்தம் நீங்கவும் வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், நடுத்தர காலத்தில் உள்நாட்டு பணவீக்கத்தினை 5 சதவீதத்தில் உறுதிப்படுத்துவதற்கு இலக்கிடப்பட்டமையானது, பொருளாதார முகவர்களின் கொள்வனவு சக்தியை உயர்த்தும் எனவும் அவர்களது படுகடன் மீள்கொடுப்பனவு இயலாற்றலை மேம்படுத்துமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. நடுத்தர காலப்பகுதியிலிருந்து நீண்ட காலம் வரையான காலப்பகுதியில் நிதியியல் இடையேற்பாடுகளின் சமநிலையற்ற தன்மைகளை சீர்செய்யும் நோக்குடன் கொள்கைச் சீர்திருத்தங்க;ாக அரசிற்கான வங்கியின் இணைப்புக்களைக்[4] கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அலுவல்சார் கொடுகடன் வழங்கும் குழுவுடனும் சீன எக்சிம் வங்கியுடனும் கொள்கை ரீதியாக உடன்பாடொன்று எட்டப்பட்டமை போன்ற அண்மைய நேர்க்கணிய அபிவிருத்திகள் அரச பிணையங்கள் சந்தையின் உறுதித்தன்மைக்குப் பங்களித்தன. எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்பு முடிவடைதல் இவ்வுறுதித்தன்மையினை மேலும் உயர்த்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இடர்நேர்வுகளைத் தணிப்பதனை நோக்கி நிதியியல் துறையினால் மேற்கொள்ளப்படும் முன்மதியுடைய வழிமுறைகளுடன் சேர்ந்து, வெளிநாட்டுத்

[4] அரசிற்கும் வங்கிகளுக்குமிடையிலான இணைப்பு என்பது, ஒரு துறையில் காணப்படக்கூடிய பாதிக்கும் தன்மைகள் மற்றைய துறைக்கு கசிந்து மோசமான பின்னூட்டல் தொடர்புகள் அவற்றின் நிதியியல் ஆரோக்கியத்தினைப் பாதிக்கின்ற அளவிற்கு அரசிற்கும் வங்கித்தொழில் துறைக்குமிடையிலான உள்ளக இடைத்தொடர்பொன்றாகும்.

துறையின் சமநிலையற்ற தன்மையினைத் தடுப்பதற்கு உறுதித்தன்மை வாய்ந்த வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்களை மேம்படுத்துவதற்கும் முயற்சிகள் தேவைப்படுகின்றன. மேலும், படுகடன் மறுசீரமைப்பு, வங்கிகளின் ஆய்ந்தறிதல் செயன்முறையின் பெறுபேறு மற்றும் முன்னோக்கிய தாக்க மதிப்பீடு செயல் வடிவம் பெறல் என்பனவற்றிலிருந்து தோன்றக்கூடிய சாத்தியமான இழப்புக்களைப் பரிசீலனையில் கொண்டு வங்கிகள் அவற்றின் மூலதனத் தாங்கிருப்புக்களை வலுப்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

பேரண்ட பொருளாதாரத் துறையில் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றங்களுடன் எதிர்வரும் காலப்பகுதியில் தற்போதுள்ள பேரண்ட நிதியியலின் பாதிக்கப்படும் தன்மைகள் படிப்படியாக மறைந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும் பொருளாதாரத்தினையும் நிதியியல் முறைமையினையும் உறுதியானதொரு நிலைக்கு இட்டுச்செல்வதற்கு, குறிப்பாக, இறைத்துறையில், பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி உடன்படிக்கையில் எதிர்பார்க்கப்பட்ட கொள்கை சீர்திருத்தங்களின் நிகழ்ச்சிநிரலுடன் இணைந்த தொடர்ச்சியான முன்னேற்றங்கள் இன்றியமையாதனவாகக் காணப்படுகின்றன. கரடுமுரடானதுமான ஒடுங்கியதுமான இப்பாதையில் பயணிப்பது சவால்மிக்கதாக இருப்பினும் இப்பாதையிலிருந்து ஏதேனும் விலகல் ஏற்படுமாயின் அது நிதியியல் முறைமைக்கும் பொருளாதாரத்திற்கும் தீங்குகளையும் மீளச்சரிசெய்யமுடியாத விளைவுகளையும் உண்டுபண்ணும். பாதிக்கப்படும் தன்மையினை முன்கூட்டியே கட்டுப்படுத்துகின்ற வலுவானதும் பொருத்தமானதுமான கட்டமைப்பினை ஆரம்பிப்பதும் சரியான நேரத்தில், சரியான ஒழுங்கில் இடைவெளியற்ற முரண்பாடற்ற கொள்கைகளைத் தொழிற்படுத்துவதும் இலங்கையின் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கு மிக முக்கியமானவையாகும்.

பொருளாதாரம், நாணய கொள்கையினைத் தளர்த்துகின்றதொரு சுழற்சி வட்டத்திற்குள் சென்று கொண்டிருப்பதனால் பேரண்ட முன்மதியுடைய கரிசனைகளைக் கட்டியெழுப்பப்படக்கூடிய கொடுகடன் சுழற்சி விரிவாக்க கட்டமொன்றிற்குள் பிரவேசிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ் அபிவிருத்திகளை நெருக்கமாகக் கண்காணிக்கின்றமையும் மற்றும் முறைமை சார்ந்த இடர்நேர்வினைத் தணிப்பதற்குத் தேவையான கொள்கை நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதும் முன்மதியுடைய தலையீடுகளினூடாக நிதியியல் உறுதித்தன்மையினை உறுதிப்படுத்துவதும் மத்திய வங்கியின் கடப்பாடுகளாகும்.